Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-௵ நவம்பர்௴ 21௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 36

# ஜெர்மனி பிரிட்டனைத் தாக்குமா?

## "எதற்கும் தயாராயிருக்கவேண்டும்"

### மிஸ்டர் சர்ச்சிலின் எச்சரிக்கை

### ஹிட்லர் சமாளிக்கவேண்டிய கஷ்டங்கள்

சென்ற வருஷம் ஜூன் மாதம் 18-ந் தேதி, பிரான்சு சண்டை முடிந்தபிறகு, மிஸ்டர் சர்ச்சில் பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்தார். பிரிட்டனைத் தோற்கடிக்காவிட்டால், யுத்தத்தை இழக்க வண்டியதுதான் என்பதை ஹிட்லர் உணர்ந்திருக்கிறுரென்றும், இனிமேல் எதிரியின் கடுமையான கோபம் பிரிட்டனின்மேல் காட்டப்படுமென்றும் அவர் கூறினர். அப்படியே, ஜெர்மனியின் கொடூரம் உடனே பிரிட்டன்மேல் வெடிகுண்டு மழையாகப் பொழிந்தது. ஜெர்மன் விமானப்படை, பிரிட்டிஷ் விமானப் படையைவிட, அப்போது எண்ணிக்கையில் அதிகமாயிருந்தது. ஆனல் பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானத் தாக்குதலைத் தடுத்து, விமான யுத்தத்தில் ஜெர்மனிக்கு வெற்றி உண்டாகாதவாறு செய்துவிட்டன. 1941-௵ ஆகஸ்ட்டு௴ 15௳ லண்டனுக்குள் பிரவேசிப்பேன் என்ற ஹிட்லருடைய ஜம்பப்பேச்சு பலிக்காமல் போய்விட்டது. சுமார் 20 நாள் கழித்து, அதாவது செப்டெம்பர்௴ 4௳, ஹிட்லர் ஒரு சமாதானம் கூறினர். அவர் கூறியதாவது :—"நான் வழக்கமாக எல்லா விஷயங்களையும் சாமர்த்தியமாகவும், ஜாக்கிரதையாகவும் செய்பவன் என்பதை நீங்கள் நம்பவேண்டும். என் ஹிட்லர் இன்னும் பிரிட்டனுக்கு வரவில்லை என்று யாராவது பிரிட்டனில் கேட்கலாம். அதற்கு, 'அமைதியாயிருங்கள். அவர் வந்து கொண்டிருக்கிறர்' என்று நாங்கள் பதிலளிக்கிறேம்" என்று ஹிட்லர் சொன்னர். அக்டோபர்௴ 21௳ மிஸ்டர் சர்ச்சில் பேசியபோது, ஹிட்லரின் வீண் ஆடம்பரப் பேச்சைக் கேலிசெய்து பேசினர். "எங்களுடைய ஆகாய விமானப்படை தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்துவருகிறது. அதிக காலமாக வாக்களிக்கப்பட்ட தாக்குதலை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேம்—கடலில் இருக்கும் மீன்கள்கூட எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன"—என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினர்.

### தளராத ஊக்கம்

ஆனல் பிரிட்டிஷ் மக்கள் தங்களுடைய யுத்த முயற்சியில் தளராத ஊக்கத்துடன் இருக்கவேண்டும் என்ற விஷயத்தை மிஸ்டர் சர்ச்சில் அடிக்கடி வற்புறுத்தி வருகிறர். "ஹிட்லருடைய படைகள் எப்போதாவது தாக்கினல் அதற்குத் தயாராயிருக்கவேண்டும்; அது இன்றிரவு வந்தாலும் வரும்; அல்லது அடுத்த வாரம் வந்தாலும் வரும்; அல்லது வராமல் போனலும் போகும். ஆனல் திடீரென்று வந்தால் அதைத் தாங்குவதற்குத் தகுதியாக நாம் இருக்கிறேம் என்று காண்பிக்கவேண்டும்," என்று மிஸ்டர் சர்ச்சில் கூறியிருக்கிறர். "1941-௵ படையெடுப்பு காலம்" என்று கூறப்படுவது ஒரு சாதாரண மிரட்டல்; பிரிட்டனுக்கு வந்த தீமை ஒரு வருஷத்துக்கு முன்னமேயே போய்விட்டது—என்று பிரிட்டனில் சிலர் நினைத்தல் கூடும். ஆனல் மிஸ்டர் சர்ச்சில் அது போன்ற நினைப்பை தன்னுடைய பிரசங்கங்களினல் அகற்றியிருக்கிறர்.

1940-௵ ஜூன்௴ பிரான்சு வீழ்ச்சியடைந்தது. இதன்பின் ஹிட்லரின் கண்ணேட்டம் பிரிட்டன்மேல் திருப்பப்பட்டது. ஜெர்மன் விமானப்படை முன்னே வழிகாட்டிக்கொண்டுபோக, ஜெர்மன் பட்டாளங்கள் சிறு படகுகளில் ஏறி, இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து சென்று, பிரிட்டனில் இறங்கிவிடலாம் என்று ஹிட்லர் போட்ட திட்டம் நிறைவேறவில்லை. இது ஒரு புதிய திட்டமல்ல. 1803-௵ நெப்போலியனல் போடப்பட்ட திட்டம் இதுதான். இங்கிலீஷ் கால்வாய் ஒரு சாக்கடை என்றும், முயற்சி செய்பவர்கள் அதைக்கடந்து செல்லலாமென்றும் நெப்போலியன் கூறினர். பிரிட்டிஷ் கப்பற்படை நெப்போலியனுடைய முயற்சியை முறியடித்தது. அதன் பின் நெப்போலியன் தன்னுடைய துருப்புகளை தென்கிழக்கில் ஆஸ்திரியாமீதும், அதன் பின் கிழக்கில் ரஷ்யாமீதும் திருப்பிவிட்டார். அவருடைய முயற்சி தோல்வியடைந்தது. 1940-௵த்தில் ஹிட்லர் இதே முயற்சியைச்செய்து தோல்வியடைந்தார். ஹிட்லரின் முன்னணிப் படையாகிய ஜெர்மன் விமானப்படை இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து, பிரான்சின் கரையோரக் கால்வாய் துறைமுகங்களில், ஜெர்மன் பட்டாளங்கள் படகுகளில் ஏறிப்பின்னல் வருவதற்குத் தயாராயிருந்தன. பிறகு என்ன நடந்தது? பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களை விரட்டியடித்துத் துரத்திவிட்டன. அதிக நஷ்டத்துடன், ஹிட்லரின் விமானப்படை திரும்பி ஓடிவிட்டது. பிரிட்டிஷ் விமான வெடிகுண்டுகள் ஜெர்மன் படகு பட்டாளங்களின்மேல் ஏராளமாக விழுந்து அவர்களை நாசம் செய்துவிட்டன.

### பழைய முயற்சிகள்

ஹிட்லர் உடனே நெப்போலியன் காட்டிய வழியைப் பின்பற்றினர். தென்கிழக்கில் பால்கன் பிரதேசத்தை முதலில் தாக்கிவிட்டு, பிறகு கிழக்கில் ரஷ்யாவைத் தாக்க ஆரம்பித்தார். ரஷ்யாவின் மேல் படையெடுத்தது 1941-௵ ஜூன்௴ 22௳. ரஷ்ய யுத்தத்தில், ஏராளமான டாங்கிகள், ஆகாய விமானங்கள், ஆயிரக்கணக்கான பீரங்கிகள், லட்சக்கணக்கான சிப்பாய்கள் ஜெர்மனியால் இழக்கப்பட்டது. இதனல் பிரிட்டன்மேல் இனி படையெடுப்பது நடக்காத காரியம் என்ற உணர்ச்சி பரவியிருக்கிறது. இது ஒரு தவறு. ஹிட்லர் ரஷ்யாவில் தோற்றலும் வெற்றியடைந்தாலும், அடுத்தபடியாக பிரிட்டனைத்தான் தாக்கவேண்டும். ஒரு இடத்தில் தோல்வியடைந்தால், வேறொரு இடத்தில் வெற்றியைக் காட்டினல்தான் ஜெர்மன் பொதுமக்களைச் சமாதானப்படுத்தலாம்.

ஹிட்லருக்கு ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவில் உள்ள தொழிற்சாலைப் பொருள்கள் உதவியாயிருக்கின்றன; 120 லட்சம் சிப்பாய்கள் இருக்கிறர்கள்; இதல்லாமல் 49 லட்சம் 'ரிசர்வ்' துருப்புகள் இருக்கின்றன. இதில் மூன்றில் ஒரு பாகம்தான் ரஷ்ய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. மற்றவைகள் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சிலும், பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், தெற்கு நார்வே முதலிய நாடுகளில் இருக்கின்றன. அவசியம் நேர்ந்தால், அச்சுநாட்டுக் கூட்டாளிகளாகிய இத்தாலி, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா முதலிய நாடுகள் ஜெர்மனிக்கு உதவியாக ஒரு கோடி சிப்பாய்கள் அனுப்ப முடியும். இப்போது நான்கு ஜெர்மன் விமானப்படைகள் ரஷ்ய யுத்த முனையில் போர் புரிகின்றன. இவைகளல்லாமல், ஜெர்மனிக்கு மூன்று விமானப்படைகள் (அதாவது 5,000 விமானங்கள்) இருக்கின்றன. பிரிட்டன்மேல் மறுபடியும் படையெடுப்பதற்கு அவைகளை உபயோகிக்கலாம்.

### பிரிட்டனின் கடல் பலம்

ஆனல், இந்தப் படையெடுப்பு சுலபமான காரியமல்ல. இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டுவதற்கு, அல்லது வடக்குக் கடலைத் தாண்டுவதற்கு ஒரு பெரிய படையை அனுப்புவதற்குமுன் விமானப் பலத்திலாவது, அல்லது கடற்படை பலத்திலாவது, அல்லது இரண்டிலுமாவது முதன்மை ஸ்தானத்தை ஜெர்மனி அடையவேண்டும். விமான பலத்தில் பிரிட்டன் ஜெர்மனியோடு சரிசமான நிலையையடைந்துவிட்டது என்று மிஸ்டர் சர்ச்சில் சில நாள்

களுக்குமுன் அறிவித்திருக்கிறார். இதல்லாமல், எப்போதும் பிரிட்டன் கடற்படை பலத்தில் உலகத்திலேயே முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. ஹிட்லர் பிரிட்டனைத் தாககுவதென்றால், பிரிட்டனில் ஜெர்மன் பட்டாளம் இறக்கப்படவேண்டும்; பட்டாளத்துக்கு வேண்டிய சாமான்கள், உணவுப் பொருள்கள் முதலியன அனுப்புவதற்கு வழி ஏற்படுத்தவேண்டும்; இந்தவழி குறைந்த பட்சம் நான்கு வாரங்களுக்காவது பிரிட்டிஷ் கடற்படையினால்தாக்கி நாசமாக்கப்படாமல் பாதுகாக்கவேண்டும். இதை எப்படி ஹிட்லரால் செய்யமுடியும்?

ஹிட்லருக்கு வேறு யோசனைகள் இருக்கலாம். இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டுவதற்கு கடல் வெடிகுண்டுகளின் உதவியால் இரண்டு பெரிய பாதைகளை ஏற்படுத்தலாம். பிரிட்டிஷ் கப்பல்கள் இவைகளை உடைக்கவந்தால் அவைகளைத் தாக்குவதற்கு ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் அனுப்பப்படலாம். தனக்கு உதவியாக விஷி அரசாங்கத்தினிடம் இருக்கும் பிரெஞ்சுக் கப்பல்களை ஹிட்லர் கேட்கலாம். பிரான்சின் துரோகிகளாகிய தார்லானும், லவாலும், பிரெஞ்சுக்கப்பல்களை ஜெர்மனிக்கு கொடுக்கலாம். கிரீட் தீவில் நடந்ததுபோல ஆகாய விமானங்கள் மூலமாக பிரிட்டனில் ஜெர்மன் துருப்புகள் இறங்கலாம். அனால் அதன்பின் 40 லட்சம் வீரர்கள் அடங்கிய பிரிட்டிஷ் பட்டாளத்தை அவர் அழிக்கவேண்டும்.

### சில புள்ளி விவரங்கள்.

இதல்லாமல், துருப்புகளைக் கொண்டுவருவது, யுத்த முஸ்தீப்பு, உணவுப்பொருள், வெடிகுண்டு சாமான்கள் முதலியவைகளை 'சப்ளை' செய்வது, முதலிய கஷ்டங்கள் இருக்கின்றன. ஐந்து ஜெர்மன் பட்டாளங்கள் வருகின்றன என்று வைத்துக் கொண்டாலும், அவைகளுக்கு உதவியாக 1,800 டாங்கிகள், 10,000 மோட்டார், 1,000 மோட்டார் சைகிள்கள் தேவையாயிருக்கும். இவைகள் இங்கிலீஷ் கால்வாயைக் கடப்பதற்கு 1,000 பெரிய படகுகள் வேண்டியிருக்கும். கடப்பதற்கு ஒரு வாரம் பிடிக்கும் என்று வைத்துக்கொண்டால், 25 லட்சம் காலன் பெட்ரோல் எண்ணெய் வேண்டும். நேராக பிரெஞ்சுக் கரையோரப்பட்டணமாகிய கலேயிலிருந்து குறுக்கு வழியில் கெண்டுக்கு வருவதாயிருந்தால், குறைந்தது மூன்று மணிநேரம் பிடிக்கும். தூர வழியில், நார்வேயிலிருந்து ஸ்காட்லாந்துக்கு வருவதாயிருந்தால், 50-மணி நேரம் பிடிக்கும். இதற்குள், பிரிட்டனுடைய யுத்தக் கப்பல்கள், விமானங்கள், கரையோரப் பீரங்கிப் படைகள் தங்களுடைய வேலையைச் செய்துகொண்டேயிருக்கும். உலகத்திலெல்லாம் இருக்கும் கடற்படை பீரங்கிகளைவிட அதிகமாக பிரிட்டனிடம் பீரங்கிகள் இருக்கின்றன. 1940-ம் ஆு செப்டெம்பர்மீ பிரான்சின் கரையோரத்தில் இருந்த துருப்புக் கப்பல்களில் மூன்றில் ஒரு பாகத்தையும், சேமித்து வைக்கப்பட்ட வெடிகுண்டு சாமான்கள் முதலியவற்றில் ஐந்தில் இரண்டு பாகமும், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டு அழிந்துபோய்விட்டன.

நார்வேயில் ஹிட்லரின் ஐந்தாம்படை இருந்தது; பிரிட்டனில் அது கிடையாது. கிரீட்டில் தகுதியான விமான எதிர்ப்பு இல்லாமையால், ஜெர்மானியர்கள் அதைக் கைப்பற்றினார்கள்; பிரிட்டனில் திறமையான விமான எதிர்ப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கைப்பற்றப்பட்ட நாடுகளைவிட ஜெர்மன் ராணுவ பலம் உயர்ந்ததாயிருந்தது; ஆனால் பிரிட்டனையும் ரஷ்யாவையும் பொறுத்தவரையில், ஜெர்மனிக்கு இந்த உயர்ந்த தன்மை இல்லை. 'கிளைடர்' என்ற ஆகாய விமானங்கள் மூலமாக, ஏராளமான ஜெர்மன் பாரஷூட் துருப்புகள் பிரிட்டனில் இறங்கி, விஷப் புகை, விஷக் கிருமிகள் முதலியவைகளைப் போட்டு, போக்குவரவு சாதனங்களின்மேல் வெடிகுண்டுகளை வீசி நாசம் செய்துவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். ஆனால் இதற்கெல்லாம் பிரிட்டன் தயாராயிருக்கிறது. எவ்வளவு ஆகாய விமானங்கள் வந்தாலும் அவைகளை ஆகாயத்திலேயே சுட்டு வீழ்த்திவிடும்படியான உறுதியுடனும், பலத்துடனும் பிரிட்டன் விளங்குகிறது.

# துணி நெய்யும் தொழிலும் 'யுத்தசப்ளை'யும்

## இந்திய தொழிற்சாலை அபிவிருத்தி

### சர் அலெக்சாண்டர் ராஜரின் சிபார்சு

இந்தியாவில் யுத்தத்திற்காக ஏராளமான துணி வகைகளும், பூட்ஸ், குதிரைச் சேணம் முதலியவையும், தயார் செய்யப்படுகின்றன. அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் துணி நெய்யும் தொழிற்சாலைகள் சிப்பாய்களுக்கு வேண்டியவைகளில் 14,000 பொருள்களை 'சப்ளை' செய்கிறார்கள். யுத்த ஆரம்பத்துக்குமுன் 17,000 பேர் இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருந்தார்கள்; இப்போது 49,000 பேர் வேலைசெய்கிறார்கள்.

யுத்தத்திற்குமுன் துணி நெய்யும் தொழிற்சாலைகளில் மாதம் ஒன்றுக்கு 75,000 ஆடைகள் நெய்யப்பட்டன. 1941-ம்ஆுத்தில் மாதத்துக்கு 50 லட்சத்துக்குமேல் ஆடைகள் செய்யப்படுகின்றன. யுத்தத்துக்குமுன் வட இந்தியாவில் ஷாஜஹான்பூர் என்ற இடத்தில் துணி நெய்யும் தொழிற்சாலை இருந்தது. இப்போது, சென்னை, சிக்கந்தராபாத்து, பம்பாய், கல்கத்தா, ஆக்ரா, டில்லி, முதலிய பட்டணங்களிலும், பஞ்சாப் மாகாணத்திலும் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் உற்பத்தி வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

### தொழில் முன்னேற்றம்

குதிரைச்சேணம் முதலியன செய்யும் தொழிற்சாலை பலவகையான சாமான்களைச் செய்கிறது. வேண்டிய தோல் வகைகளைத் தானே தயார் செய்து, பதனிடுவது முதல், கடைசியில் பக்குவப்படுத்தப்பட்ட சாமான் வரைக்கும் எல்லாம் இந்தத் தொழிற்சாலையிலேயே செய்யப்படுகின்றன. யுத்தம் ஆரம்பித்தபிறகு முதல் ஆறுமாதத்தில் நூற்றுக்கு இருபது வீதம் அதிகமான உற்பத்தி செய்யப்பட்டது. அடுத்த வருஷம் உற்பத்தி இன்னும் அதிகமாயிற்று. இப்போது யுத்தத்துக்குமுன் செய்ததைவிட நான்குமடங்கு அதிகமான உற்பத்தி வேலை நடக்கிறது. இப்போது 12,000 பேர் இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். யுத்தத்திற்கு முன்னிருந்த தொகையைவிட இது ஐந்து மடங்கு அதிகமானது. வைத்திய சம்பந்தமான மருந்து வகைகள் பம்பாயிலும் சென்னையிலும் இருக்கும் தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. சென்னையில் அரசாங்க வைத்திய சாமான் பண்டகசாலை இலாகாவின் கீழ், வெடிகுண்டு காயச் சிகிச்சைத் துணிகள் செய்யப்படுகின்றன. இப்போது ஒரு நாளைக்கு இப்படி 30,000 சிகிச்சைத் துணிகள் செய்கிறார்கள். இதற்கு வேண்டிய சகல பொருள்களும் இந்தியாவிலிருந்தே வாங்கப்படுகின்றன. காட் லிவர் ஆயில் என்ற மீன் எண்ணெயிலிருந்து செய்யப்படும் 'மால்ட் எக்ஸ்ட்ராக்ட்' என்ற மருந்து இங்கேயே செய்வதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன.

### இந்தியாவின் சிறப்பு

யுத்த சப்ளை சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ராஜர் கமிட்டி இந்தியாவுக்கு வந்து 700 தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு, 500 ஆலோசனைக் கூட்டத்திற்குமேல் கூட்டி, சகல விஷயங்களையும் கவனித்தார்கள். இந்தியாவை விட்டு நீங்குவதற்கு முன் கமிட்டியின் தலைவரான சர் அலெக்சாண்டர் ராஜர் பின் வருமாறு கூறினார்:—

"தொழிற்சாலை அபிவிருத்தி மிகப்பெரிய அளவில் செய்யவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்திருப்பது இந்தியாவைக் குறித்து மாத்திரந்தான். இந்த தொழிற்சாலைகள் யுத்த சம்பந்தமான வேலைகளுக்கு ஏற்படுத்தப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் புதிய முறையில் செய்யப்பட்ட யந்திரங்களையுடைய இந்த தொழிற்சாலைகள், சமாதான, காலத்தில் வேண்டிய பல வேலைகளைச் செய்வதற்கு உதவும். இதனால் இந்தியாவின் தொழிற்சாலைப் பொருள் அபிவிருத்தி அதிகமாகும்."

யுத்த சம்பந்தமாக, இந்திய பண்டகசாலை இலாகா அநேக பொருள்களை இந்தியாவிலேயே வாங்கிவருகிறது. 1940-41-ம்ஆுத்தில் வாங்கப்பட்ட துணி சாமான்கள் 15·10 கோடி ரூபாய். 1·62 கோடி ரூபாய்க்குக் கம்பளிகள் வாங்கப்பட்டன. 1941-ம்ஆு

மார்ச்சுமீ 8 கோடி கஜம் 'காக்கி'த்துணி சிப்பாய் களின் உடுப்பு தைப்பதற்காக வாங்கப்பட்டது. 1 கோடியே 70 லட்சம் கஜம் 'கான்வஸ்' துணி பலகாரியங்களுக்காக வாங்கப்பட்டது. இவைக ளுடைய விலைமதிப்பு மொத்தம் 75 லட்சம் ரூபாய்.

கம்பளித் துணிகள் செய்வதன் சம்பந்தமாக, இந் திய சப்ளை இலாகாக்காரர்கள் இந்தியாவின் உற்பத் தித்திறமையை நூற்றுக்கு நூறுவீதம் உபயோகப் படுத்தி வருகிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 31½ லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட 'ஐந்து கணக்கு' நூலை வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். பம் பாய், ஷோலாப்பூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள 'மில்'கள் இந்த நூலை சப்ளை செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மணல் பைகள் செய்வதற்கு பெரிய 'ஆர்டர்'கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. சணல் கயிற்றினால் செய்யப்பட்ட 70 கோடி மணல் பைகள் யுத்தத்தின் முதல் வருஷத்தில் இந்தியா அனுப்பி யிருக்கிறது.

இப்படியாக, சிப்பாய்களின் உடைகள், வைத்திய சிகிச்சை சம்பந்தமாக இந்தியாவில் ஏராளமான துணிகள் முதலியன செய்யப்பட்டு வருகின்றன. இதனால் இந்தியத் தொழிற்சாலைகள் அபிவிருத்தி யடைந்துவருகின்றன.

# விமானந் தாங்கும் கப்பல்

## சில விவரங்கள்

விமானந் தாங்கும் கப்பல் என்றால் நடுக் கடலில் கடற் படைக்கு உதவியாக பல விமானங்களைத் தாங் கிச்செல்லும் கப்பல் என்று பொருள். முதல் முத லாக பிரிட்டனால் கட்டப்பட்ட விமானந் தாங்கும் கப் பலுக்கு "ஈகிள்" என்று பெயர். இது 21 விமா னங்களைத் தாங்கிச் செல்வது. "பியூரியஸ்" என்ற கப்பல் 33 விமானங்களையும், "கரேஜியஸ்", "குளோரியஸ்" என்ற கப்பல்கள் ஒவ்வொன்றும் 48 விமானங்களையும் தாங்கிச் செல்பவை. "ஹெர் மிஸ்" என்ற கப்பல் 15 விமானங்களை உடையது. முழுகடிக்கப்பட்ட "ஆர்க் ராயல்" 70 விமானங்களைத் தாங்கக்கூடியது.

விமானந் தாங்கும் கப்பல்கள் அதிவேகமாகச் செல்லக்கூடியவை. கப்பற் படையின் பின்னாலேயே வேகமாகச் சென்றால்தான், அதனுடைய விமானங் கள் விரைவில் உபயோகப்படும். இந்தக் கப்பல் களின் மேடை, ஆகாய விமான நிலையங்களிலிருப் பதுபோல அகலமானதல்ல. ஆனால், இந்த மேடை யிலிருந்து விமானங்கள் சீக்கிரம் புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமானங்கள் பறந்து சென்றுவிட்டு, திரும்பி கப்பலுக்கு வந்து இறங்குவது ஒரு கஷ்டமான காரியம். இந்த கஷ் டத்தைக் குறைப்பதற்காக, தடுக்கும் கம்பிகள் மேடையின்மேல் நீட்டப்படும். அந்தக் கம்பிகள் விமான வேகத்தைத் தடுத்து அதை நிறுத்திவிடு கின்றன.

# "ஆர்க் ராயல்" முழுகடிக்கப்பட்டது.

### பிரிட்டனின் விமானந்தாங்கும் கப்பல்.

"ஆர்க் ராயல்" என்பது பிரிட்டனுடைய பிரம் மாண்டமான விமானந்தாங்கும் கப்பல். இது 22,000 டன் எடையுள்ளது. இதை முழுகடித்து விட்டதாக, ஹிட்லரின் பிரசார மந்திரியான டாக்டர் கோப்பல்ஸ் ஆறுதடவை கூறியிருக்கிறார். கடைசி யில் சென்றவாரம் தான் இந்தக்கப்பல் உண்மையில் முழுகடிக்கப்பட்டது. "ஆர்க் ராயல்" மத்தியதரைக் கடலில் இரண்டு வருஷமாக பல கடற் சண்டைகளில் கலந்துகொண்டது. மத்திய தரைக்கடல் பிரதேசத் திலிருந்து ஜிப்ரால்டருக்கு வரும்போது இது ஜெர் மன் சப்மரீன் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு முழுகிவிட்டது. இதைக் கட்டுவதற்கு 2½ வருஷம் பிடித்தது; 30 லட்சம் பவுன் செலவாயிற்று.

பிரிட்டனின் கடற்படை மந்திரியாகிய மிஸ்டர் எ. வி. அலெக்சாண்டர் இந்த நஷ்டத்தைப்பற்றிக் கூறியதாவது :—

"பிரிட்டிஷ் கப்பற்படைக்கு இது ஒரு பெரிய நஷ்டந் தான். கப்பல் மூழ்கியதால் இறந்துபோனவர்கள் மிகக்கொஞ்சம் என்பதை அறிய நான் சந்தோஷப் படுகிறேன். இந்த விமானந்தாங்கும் கப்பல் பிரிட்ட னுக்குச் சிறந்தவேலை செய்திருக்கிறது. இதிலிருந்து சென்ற விமானங்கள் 100 எதிரி விமானங்களுக்கு மேல் சுட்டு வீழ்த்தியிருக்கின்றன. 'ஆர்க் ராயல்' கப்பல் நம்முடைய தேசத்துக்கு நல்ல சேவை செய் திருக்கிறது."

"ஆர்க் ராயல்" முழுகிவிட்ட சம்பவம் ஒரு விஷ யத்தை நினைவுக்குக் கொண்டுவருகிறது. அது தான் விமானந்தாங்கும் கப்பல்களில் பிரிட்டனுக்கு இருக் கும் பலம். யுத்தம் ஆரம்பித்த பிறகு, இப்படிப்பட்ட கப்பல்கள் மூன்றை எதிரிகள் முழுகடித்துவிட்டார் கள். முதலிரண்டு கப்பல்கள், "கரேஜியஸ்", "குளோரியஸ்" என்பவைகள். இந்த நஷ்டங் களுக்குப் பிறகும் பிரிட்டனுக்கு அநேக விமானந் தாங்கும் கப்பல்கள் இருக்கின்றன. அவைகளிற் சில பின் வருமாறு :—

"ஆர்கஸ்" (14,999 டன்); "ஈகிள்" (22,600 டன்); "ஹெர்மிஸ்" (10,850 டன்); "பியூரியஸ்" (22,450 டன்); "இலஸ்டிரியஸ்" (23,000 டன்.) கடைசியாகக் கூறப்பட்ட கப்பலைப்போல வேறு மூன்று கப்பல்கள் இருக்கின்றன.

# விமானங்கள் கட்டுவதற்கு இந்திய மரங்கள்

## புதிய ஆராய்ச்சியின் பலன்

### வாரைகளும், பலகைகளும் உபயோகப்படுகின்றன

விமானங்கள் கட்டுவதற்கு வேண்டிய மரவகை கள் இந்தியாவில் அதிகமாகக் கிடைக்கின்றன. சென்ற சில வாரங்களாக அவைகளைப்பற்றிய விவ ரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப் போது சில மரங்கள் விமானங்கள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. 1915-18 வருஷங்களில் தெரியாமல் இருந்த அல்லது பரீக்ஷிக்கப்படாமல் இருந்த அநேக மர வகைகள் விமானங்கள் செய்வதற்கு உபயோகப்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிட்கா மரத்துக்கு எவ்வளவு உறுதியும், கனமும் இருக்கின்றனவோ அதே உறுதியும் கனமும் இந்திய மரங்களில் சிலவற்றிற்கு இருக்கின்றன.


சென்ற யுத்தத்தின்போது ஒருபழுதுமில்லாத நீண்ட வாரைகள் இந்தியாவிலிருந்து வேண்டு மென்று கேட்டார்கள். ஆனால் இந்திய மரங்க ளைக்கொண்டு இப்படிப்பட்ட வாரைகள் செய்ய முடியாது என்று காட்டு ஆராய்ச்சி இலாகா அதி காரிகள் தெரிவித்துவிட்டார்கள். இப்போது விமான அதிகாரிகளும், காட்டு ஆராய்ச்சி இலாகா அதி காரிகளும் சேர்ந்து விசாரித்ததில், விமானங்கள் கட்டுவதற்கு உபயோகப்படும் வாரைகளில் முக்கால் வாசி குட்டை வாரைகள் என்றும், அதற்கு இந்தி யாவில் கிடைக்கும் வாரைகளையே உபயோகப்படுத்த முடியுமென்றும் தெரிந்தது. தற்கால விமானங்க ளில் முன்செய்ததுபோல நீண்ட மரப் பலகைகளை உபயோகிக்காமல், சிறுசிறு துண்டுகளைத்தான் உபயோகிக்கிறார்கள்.

அந்தமான் பாடாக் மரத்தைத் தவிர, பாக்கி இந்திய மரங்களைக்கொண்டு விமான விசிறிகள் காட்டு ஆராய்ச்சி இலாகாவில் செய்யப்பட்டிருக்கின் றன. அப்படி செய்யப்பட்ட விசிறிகள் திருப்திகர மாக இருக்கின்றன என்று தகவல் கிடைத்திருக்கிறது.

காலம் செல்லச்செல்ல மனிதனின் தேவைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்குத் தகுந் தாப்போல் விஞ்ஞானமும் ஆராய்ச்சியும் வளர்ந்து கொண்டே வருகின்றன. இருபது வருஷங்களுக்கு முன்னர் சில மரவகைகள் பிரயோசனமில்லை என்று தள்ளப்பட்டன. அதே மரங்கள் சமீப ஆராய்ச் சிகள் காரணமாக விமானங்கள் கட்டுவதற்கு உபயோ கப்படக்கூடிய மரங்கள் என்று புலப்பட்டன. இந்த ஆராய்ச்சியின் பலனாக இந்திய மரவகைகள் நாளுக்குநாள் விமானங்கள் கட்டுவதற்கு அதிகமாக உபயோகப்பட்டுக்கொண்டு வருகின்றன.

இந்த வருஷ ஜனவரி மாதம் விமான டைரக்டர் காட்டு ஆராய்ச்சி இலாகாவுக்கு "விமானங்களுக்கு வேண்டிய மரவகைகள் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும்" என்று எழுதியிருக்கிறுர். இந்திய ஆகாய விமான தளகர்த்தரும் அப்படியே கூறியிருக்கிறுர்.

## பிரிட்டிஷ் பட்டாளத்தின் நவீன சாரணர்கள்



**பிரிட்டிஷ் பட்டாளத்தில், முன்னுல் சென்று வேவு பார்க்கும் வேலே சில படைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படைகள், மற்ற பெரிய படைகள் வரும் வரையில் விரோதிகளுக்குத் தொல்லே கொடுத்துக்கொண்டே இருக்கும். நல்ல பயிற்சி பெற்ற இப்படைகள், யுத்த முஸ்தீப்புள்ள மோட்டார்களில் ஏறிக்கொண்டு சௌகரியமான பிரதேசத்தை அடைவதற்காக, மலேச்சரிவு பாதைகளில் போவதை இப்படத்தில் காணலாம்.**

## வாரச் செய்திக் குறிப்புகள்

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப் போர்

சென்ற வாரம் ஜெர்மனியில் சில முக்கியமான இடங்களின்மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன. ஜெர்மன் விமானங்கள் கிழக்கு இங்கிலாந்திலும், தென்மேற்கு இங்கிலாந்தி லும் சில வெடிகுண்டுகளைப் போட்டன. கிழக்கு ஆங்கிலியாவில் இரண்டு இடங்களில் வெடி குண்டு விழுந்தது.

ஜெர்மனியிலும் இதர நாடுகளிலும் நடக்கும் விமானப்போருக்கு இனிமேல் ஒரு புதிய விமானம் உபயோகப்படலாம். இப்போதுள்ள பிரிட்டிஷ் விமானங்களெல்லாவற்றையும் விட கடுமையாய்த் தாக்குவதும் வேகமாய்ப் போகக்கூடியதாக இந்த பிரிட்டிஷ் சண்டை விமானம் புதிதாகச் செய்யப்பட் டிருக்கிறது. சீக்கிரத்தில் அட்லாண்டிக் கடலி லிருந்து பசிபிக் தீவுகள் வரை இந்த விமானங்கள் காவல் புரியும் என்று தெரிகிறது.

இந்த புதிய விமானத்திற்கு 'பிரிஸ்டல்போ' சண்டை விமானம் என்று பெயர். ஜப்பான், யுத்தத்தை ஆரம்பித்தால் அதை அடக்குவதற்காக ஆஸ்ட்ரேலியாவில் இந்த விமானங்கள் தயாராகி வருவதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

இந்த சண்டை விமானம் 1,500 மைல் பறக்கக் கூடியது. அதில் 20 மில்லிமீடர் பீரங்கிகள் நான்கும், யந்திர பீரங்கிகள் ஆறும் இருக்கின்றன. அட்லாண் டிக் கடலில் நேசதேசக் கப்பல் பட்டணங்களேத் தாக் குவதற்காக ஜெர்மனி உபயோகித்துவரும் நாலு என் ஜின் கொண்ட 'போக் வுல்ப் காண்டார்' என்னும் விமானத்தை இந்த புதிய விமானங்களில் ஒன்று சந்தித்தபோது, அதிலிருந்த வெடிகள் சிறிது வெடித்ததனுலேயே அந்தக் காண்டார் விமானம் தூள் தூளாயச் சிதறிப்போய்விட்டதாம்.

### 2. இத்தாலி, ஆப்ரிக்கா

சென்றவாரம் பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங் கள் இத்தாலியின் முக்கிய துறைமுகப்பட்டணமாகிய நேபிள்ஸை நன்ருகத் தாக்கின. சிசிலித்தீவும் தாக்கப்பட்டது.

ஆப்ரிக்காவில் தார்ணு, பார்டியா, எல்கேசல் என்ற இடங்கள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன.

#### தோப்ருக் சம்பவம்

1936-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் "ட்யூஷ லண்ட்" என்ற ஜெர்மன் கப்பலே ஒரு விமான கோஷ்டி தாக்கியது. அந்தச் சமயத்தில் முதல் முத லாக ஜெர்மானியரோடு கைகலந்தவர் குடியரசுக் கட் சியைச்சேர்ந்த ஒரு ஸ்பானிஷ் விமானி. அவர் ஒரு வர்த்தகக் கப்பலின் தலேவராக தோப்ருக்குக்கு 25-வது தடவை செய்துள்ள பிரயாணம் பூர்த்தியான தைப்பற்றி மத்தியதரைக் கடலினுள்ள தளபதி அவரைப் பாராட்டியிருக்கிறுர்.

அவருடைய கப்பல் மிகவும் நவீனமானதுமன்று, மிகவும் வேகமாய்ச் செல்லக்கூடியதுமன்று. அவ ருக்கு முதலில் அதிகாரியாயிருந்தவரும் அவரைப் போலவே ஸ்பெயினிலிருந்து ஓடிவந்தவர்தான்.

இந்த விமானி எவ்வளவோ துணிகரமான வேலே செய்திருக்கிறுர். அதில் இந்தப் பிரயாணம் ஒன்று. அவருடைய கப்பலே தோப்ருக்கில் பட்டப்பகலில் மூன்று தடவை எதிரிகள் தாக்கினுர்கள். துறை முகத்தில் நுழையும் சமயத்தில் பீரங்கிகள் அதைத் தாக்கின. அதன் பிறகு இரவெல்லாம், மறுநா

ளெல்லாம், விமானங்களும் பீரங்கிகளும் அதைத் தாக்கிக்கொண்டேயிருந்தன. அப்படியிருந் தும் அந்தக் கப்பல் சரக்கை இறக்கிவிட்டது. அதன் பிறகு அபாயமான இடத்தைவிட்டு இருட்டிலே வெளியேறிவிட்டது. அப்போது மூன்று ஜெர்மன் விமானங்கள் அதன்மேல் பாய்ந்தன. ஒரு விமானத்தின் சிறகுகளை ஸ்பானிஷ் விமானி சுட்டு வீழ்த்திவிட்டார்.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்

அமெரிக்காவை யுத்தத்தில் இழுத்துவிடவேண்டுமென்பது ஹிட்லரின் நோக்கம் என்று சமீபத்தில் சிலர் கூறினார்கள். ஆனால் உள்ள நிலைமையைப் பார்க்கும்போது அமெரிக்காவில் யுத்தத்தில் இறங்குவதற்கு எதிராக இன்னும் அனேகர் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களை மீறி அமெரிக்கா யுத்தத்தில் இறங்கினால் யுத்தமுயற்சி மிகவும் பாதிக்கப்படலாம். அமெரிக்காதான் முதலில் ஜெர்மெனியைத் தாக்கியது என்று ஹிட்லர் கூறியதையும் சிலர் எடுத்துக்காட்டுகிறார்கள். அமெரிக்கா ஜெர்மனியைத் தாக்கியிருந்தால், அச்சு உடன்படிக்கையின் பிரகாரம் ஜப்பான் ஜெர்மனியின் உதவிக்கு வரவேண்டும். ஆனால் இந்த யுத்தத்தில் இன்னும் ஜப்பான் ஈடுபடவில்லை. ஜப்பானை யுத்தத்தில் மாட்டிவிடுவதற்காகத்தான் ஹிட்லர் இப்படிக் கூறியிருப்பதாகத்தெரிகிறது.

இப்போது அமெரிக்காவின் சம்பந்தமாக முக்கிய விஷயங்கள் கவனிக்கப்படவேண்டியவை: முதலாவது, நடுநிலைமைச் சட்ட சம்பந்தமாக சட்டசபை செய்தமுடிவு நேசநாடுகளின் யுத்தமுயற்சிக்கு மிகவும் அனுகூலமாகமுடிந்தது. அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் யுத்தமுஸ்தீப்புடன் யுத்தத் துறைமுகங்களுக்கும், போராட்டப் பிரதேசங்களுக்கும் செல்லலாம் என்பதை அனுமதித்து, நடுநிலைமைச்சட்டத்தை திருத்தி அமெரிக்க செனெட் சட்டசபை ஒரு சட்டம் ஏற்படுத்திவிட்டது.

### "ரூபென் ஜேம்ஸ்" சம்பவ எதிரொலி

"ரூபென் ஜேம்ஸ்" என்ற அமெரிக்கக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுபற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் ஆத்திரங்கொண்டிருக்கின்றன. "நியூயார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன்" பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது :—

"இந்த நாடு அமைதியாய் இருக்கிறது. ஆனால் இந்த பொறுமை அளவற்ற பலத்திலும், அபாரமான உறுதியிலும், பிறந்ததாகும். "ரூபென் ஜேம்ஸு"க்கு நேர்ந்த கதியை மறக்கவும் முடியாது; அதைச் செய்தவர்களை மன்னிக்கவும் முடியாது. நமது நாடு வேளை வரட்டுமென்று காத்திருக்கிறது—வேறொன்றுமில்லை. கொஞ்சங்கூட மனுஷத்தனமில்லாமல் வர்த்தகக் கப்பல்களைச் சூறையாடும் ஜெர்மனியின் திட்டத்தின்படித்தான் இது நடத்திருக்கிறது. மிருகத்தனமான இந்தக் கொள்கையைக் களைந்து எறிவதற்கான போர் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது."

"க்ளோப்-டெமாக்ரட்" என்னும் பத்திரிகை எழுதுவதாவது :—'நியூ ஹேவனில் நடந்ததொரு காட்சி நமக்குத் தெரிய வந்திருக்கிறது. ஆனால் இத்தகைய காட்சியை நாடெங்கும் உள்ள எத்தனையோ கடற்படை ஸ்தலங்களில் கண்டிருக்கலாம். "ரூபென் ஜேம்ஸ்" மூழ்கடிக்கப்பட்ட சேதி வந்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் நியூ ஹேவனிலுள்ள கடற்படையில் ஏராளமான ஆள்கள் சேர விரும்பினார்கள். ஆள் திரட்டும் காரியாலயத்தின் தலைமை அதிகாரியை அநேகர் தங்களை கடற்சேவைக்கு நியமிக்க வேண்டுமென்று விண்ணப்பம் போட்டார்கள். அவர்கள் கோரி போட்ட விண்ணப்பங்களைச் சமாளிக்க முடியாமல் அதிகாரி திணறிப் போய் விட்டாராம்.'

"நியூயார்க் டைம்ஸ்" எழுதுவதாவது :—அடுத்த வசந்த காலத்துக்குள் அமெரிக்க ஆயுத உற்பத்தித் திட்டம் நாஸி முயற்சியையெல்லாம் தூக்கியடித்துவிடும் என்று ஆட்டோமொபைல் இஞ்சினியர்கள் சங்கத்தலைவர் கூறியிருக்கிறார். அமெரிக்காது திறமை ஜெர்மன் உற்பத்தியைப் பின்தள்ளிவிடும் என்பதற்கு அவர் ஒரு உதாரணங் கூறினார். நாஸியர் மாதம் 3500 விமான எஞ்சின்கள் கட்டுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அமெரிக்கா மாதம் 5000 விமானங்கள் கட்டி வருகிறது.

போர்ட் மோட்டார் கம்பெனி மாதம் 400 டாங்கிகள் கட்ட திட்டம் போட்டிருக்கிறது. இந்த உற்பத்தியினால் அமெரிக்காவில் டாங்கி கட்டுபவர்களுக்குள்ளே மிஸ்டர் போர்ட் முதல் ஸ்தானம் பெற்றுவிடுவார்.

கனேடியப் பார்லிமெண்டின் எதிர்க்கட்சித் தலைவரான மிஸ்டர் ஆர். பி. உரான்சன் பிரிட்டனுக்கு விஜயம் செய்துவிட்டுச் சமீபத்தில் கானடா திரும்பினார். எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளாகியும் பகைவனுக்கு இடங்கொடோம் என்ற தளராத மனோ உறுதியுடன் விளங்கும் பிரிட்டிஷ் மக்களைக் குறித்துத் தாம் ஒரு சிறு பாராட்டு உரை கூற விரும்புவதாக அவர் கனேடிய சட்ட சபையில் தெரிவித்தார்.

"எதிரியிடம் தோற்பதை விட இறப்பதே மேல்; எதிரி எங்களை வெல்ல விடமாட்டோம்" இவை தான் மிஸ்டர் சர்ச்சில் அவரிடம், இருவரும் பிரிவதற்கு முன், கூறிய வார்த்தைகளாம்.

இதற்கு அவர், "இந்த யுத்தத்தில் நீங்கள் வெற்றிபெறுவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை" என்று பதில் அளித்தாராம்.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்

ரஷ்யப்போர்முனையில் பல பாகங்களில் ஜெர்மனியர்கள் பின் தள்ளப்படுகிறார்கள். மாஸ்கோ பகுதியில் ரஷ்யர்கள் எதிர்த்துத் தாக்கி ஜெர்மனியின் முயற்சியைப் பாழாக்கிவிட்டார்கள். தெற்குப் பகுதியில் ராஸ்டாப் என்ற பட்டண வெளிப் பாதுகாப்புகளை உடைத்துச் செல்ல அவர்கள் செய்த முயற்சி பயன்படவில்லை. ஏராளமான ஜெர்மன் சிப்பாய்கள் ரஷியப் போர்முனையில் குளிர்தாங்கமாட்டாமல் இறந்துபோய்விட்டார்கள்.

### மாஸ்கோ மக்களின் உறுதி

மிஸ்டர் எர்ஸ்கின் கால்ட்வெல் என்னும் அமெரிக்க நிருபர் சென்ற சில மாதங்களாக மாஸ்கோவில் இருந்தவர். அவர் இந்த யுத்தத்தில் மாஸ்கோ மக்களின் மனவுறுதியையும், மாஸ்கோவின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நேரில் பார்த்தவர். அவர் கூறும் விவரங்களில் சில கீழே தரப்படுகின்றன :—

தங்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை மாஸ்கோ நகர மக்கள் உணர்ந்திருந்தார்கள். அதற்குத் தங்களைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். நகரம் முழுவதும் பாதுகாப்பு வேலையில் ஈடுபட்டிருக்கிறது. உணவு வகைகளும், விறகு முதலியனவும் நிறையச் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. அன்றையத் தேதியிலிருந்து அவை வெளியிலிருந்து கிடைப்பது நின்றுபோனாலும், வசந்தகாலம் வரையில் பயமில்லை என்று தெரிகிறது.

மாஸ்கோவில் சாமான் கிடங்குகள் சிலவற்றை நான் பார்த்தேன். மலை, மலையாக உருளைக் கிழங்குகளும், கோதுமையும், பார்லியும், நிலக்கரியும், விறகும் குவிந்து கிடந்தன. வெளியிலிருந்து சப்ளை கிடைக்கவொட்டாமல் நகரம் முற்றுகையிடப்பட்டாலும் அது ஆறு மாத காலத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியும் என்று பட்டது. இன்னும் துப்பாக்கி மருந்துகளும் நிறைய சேமித்து வைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் செய்வதற்கு வேண்டிய தொழிற்சாலைகளும் நகரில் இருந்தன.

மாஸ்கோவில் பாதுகாப்புகள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொரு உயர்ந்த கட்டிடத்தின் மீதும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மாஸ்கோ நதி நகருக்கு குறுக்கே ஓடுகிறது. ஜெர்மானியர் மாஸ்கோ சுற்றுப்புறங்களை வந்து அடையும் பட்சத்தில், அதற்கு மேல் அநேக மைல் தூரத்துக்கு சிறு, சிறு குன்றுத் தொடர்களும், வயல்களும்தான் இருக்கின்றன. ஒளிந்துகொள்வதற்கே இடம் கிடையாது.

ரஷ்யாவில் இப்போது எல்லோருக்கும் துப்பாக்கி கைவெடிகுண்டு இவற்றை உபயோகப்படுத்தத் தெரியும். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லாரும் சேர்ந்து எதிரியை எதிர்த்து நிற்க முடியும் என்பதை லெனின்கிராட் நிரூபித்துவிட்டது. மாஸ்கோவில் ஜனத்தொகை சாதாரணமாக 40 லட்சம். இன்று இதில் முக்கால்வாசிப்பேர் நகரில்தான் இருக்கின்றனர். கிழவர்களும், குழந்தைகளுமாகச் சேர்ந்து பத்து லட்சம் பேர் நகரைவிட்டு வெளியே அனுப்பப்பட்டு விட்டனர். கிட்டதட்ட நகரில் உள்ள எல்லாருமே இப்போது சண்டைபோடப் பயிற்சி பெற்றவர்கள். ஆகையால் ஜெர்மானியர் வெளிப்பாதுகாப்புகளை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தாலும், நகரின் உள்ளே நுழைவதற்குத் திண்டாடிப் போய் விடுவார்கள்.

அவசியமானல் மாஸ்கோ நகரமக்கள் தங்கள் கட்டிடங்களை இடித்து தெருக்களில் மதில் அரண்கள் அமைப்பார்கள். கீழே பரப்பியிருக்கும் கற்பலகைகளை எடுத்து ஒடிஸாவிலும், லெனின்கிராடிலும் செய்ததுபோல் குறுக்கே நட்டுவிடுவார்கள். நகரத்தின் பாதுகாப்பை அரசாங்கத்தார், ஜனங்களின் கையில் விட்டு விட்டு, சேனையை மாஸ்கோவுக்குக் கிழக்கே கொண்டுபோனலும், மாஸ்கோ மக்கள் மனம் தளராது தங்கள் நகரை பாதுகாப்பார்கள்.

மாஸ்கோவில் புது மாதிரியான பீரங்கிகள் நிறைய இருக்கின்றன. ஜனங்களுக்கு வேண்டிய துப்பாக்கிகளும் அதிகமாக இருக்கின்றன. மாஸ்கோவில் உள்ள அவ்வளவு விமான எதிர்ப்புப் பீரங்கிகள் உலகத்தின் வேறெந்த நகரத்திலும் கிடையாது.

நகரைச் சுற்றி எத்தனையோ அகழிகள் இருக்கின்றன. சில வெறும் குழிகள்; இவற்றில் யந்திரத் துப்பாக்கிப் படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில டாங்கிப் பொறிகள், அவசியமானல் உணவு முதலியவை வெளியிலிருந்து வராமலேயே இந்த நகரம் அதிக காலம் சமாளிக்க முடியும். குடிப்பதற்கும், நெருப்பு பிடித்துக்கொண்டால் அணைப்பதற்கும் வேண்டிய ஜல வசதி அதிகமாய் இருக்கிறது. காயம்பட்டவர்களைக் கவனிக்க வைத்திய சாலைகள் இருக்கின்றன. அநேகவித தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஹிட்லரை உள்ளே விடக்கூடாது என்ற உறுதியுடன் எப்படி லெனின்கிராட் மக்கள் விளங்குகிருர்களோ அதே உறுதியுடன் மாஸ்கோ நகர மக்களும் காணப்படுகிருர்கள்.

மேலே கூறப்பட்ட அமெரிக்க நிருபரின் விவரங்கள் மாஸ்கோவில் உள்ள நிலைமையைத் தெளிவாகக் காட்டியிருக்கிறது.

## ஐந்தாவது பாய்ச்சலின் பயன்.

மாஸ்கோவின்மேல் ஜெர்மானியர்கள் நடத்திய ஐந்தாவது பாய்ச்சல் நவம்பர்மீ 3உ விடியற்காலையில் ஆரம்பிக்கப்பட்டது. ஜெர்மானியர்கள் இதற்காக முன் எப்போதும் செய்யாத அளவுக்கு பெரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். கெட்டித் தரையினல் கிடைக்கக்கூடிய அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கிடைக்கக்கூடிய யந்திர சாதனங்கள் எல்லாம் கொண்டுவந்து மத்திய அரங்கத்தில் பிரதம தாக்குதலுக்காகக் குவித்து வந்தார்கள். அதனேடு நாள் முழுதும் கூட்டங் கூட்டமாய்ப் பாய்ச்சல் விமானங்களை அனுப்பினர்கள். ரஷ்ய விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஜெர்மன் விமானங்களை நாசம் செய்துகொண்டு வருகின்றன; ரஷ்யர்கள் ஜூன்மீ 22உ முதல் போர்களத்திலே நல்ல அனுபவம் பெற்றிருக்கிருர்கள். முக்கியமாய் யந்திரப் படைகளின் தாக்குதலைச் சமாளிப்பதில் அவர்களுக்கு நல்ல திறமை ஏற்பட்டிருக்கிறது. காலினுக்கு வடக்கே போர் நடத்திவரும் ஜெர்மன் யந்திரப் படைகளின்மீது அவர்களுக்கு நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. மான்கோ பிரிவுக்குத் தெற்கே டிமோஷெங்கோ ஒரு பரந்த போர்முனையில் தமது படைகளைக் குவித்து வைத்திருக்கிருர். மாஸ்கோவின்மேல் செய்த ஐந்தாவது படையெடுப்பும் ஜெர்மனிக்குத் தோல்வியாக முடிந்தது.

## குளிர்காலக் கஷ்டம்.

லெனின் கிராட் பிரதேசத்தில் ரஷ்யர்கள் தளராத உக்கிரத்துடன் போராடி வருகிருர்கள். மாஸ்கோவைக் காத்து நிற்கும் ரஷ்ய சைன்யங்களும் இப்படியே இருக்கின்றன. அங்கே வடக்குப்பக்கத்தில் சில சிறு பிரதேசங்களை ரஷ்யர்கள் பிடித்திருக்கின்றனர்.

தெற்குப் பக்கத்தில் ரோஸ்டோவைச் சுற்றிலும் ரஷ்யர்களுக்கு இன்னும் அதிகமான வெற்றி கிடைத்திருக்கிறது. நிலைமை பொதுவாக கவனித்துப் பார்த்தால் சென்ற வாரத்தில், ஜெர்மன் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டிருக்கிறதென்பது தெரியும்.

சமீபத்தில் ஜெர்மன் துருப்புகளுக்கு கஷ்டங்களை மிகவும் அதிகமாக்கி விட்டிருப்பது ரஷ்யாவின் குளிர்காலம்தான். இந்தக் குளிர்காலத்தில் வெறுங் குளிர் மட்டும் ஜெர்மானியர்களுக்கு கஷ்டம் கொடுக்கவில்லை; மற்றொரு கஷ்டமுமிருக்கிறது. அவர்கள் அதிகப்படியாய் 'சப்ளைகள்' கொண்டுவரவேண்டியதாயிருக்கிறது. ஆனல் ஜெர்மன் போக்குவரத்து ஏற்பாடுதான் முன்பே தாங்கமுடியாத பாரத்தைத் தாங்கிக்கொண்டு கவிழ்ந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலையிலிருக்கிறதே? இதனல்தான் ஜெர்மன் சப்ளைகள் மிக நிதானமாய் வந்துகொண்டிருக்கின்றன. இதனல்தான் ஜெர்மன் திட்டங்கள் மறுபடியும் தடுமாறிப்போய்விட்டன.

## ரஷ்ய உதவிக்குப் புதிய பாதை.

பேரிங் ஜலசந்தி வழியாய் அமெரிக்காவையும், ரஷ்யாவையும், ஒன்று சேர்க்கும் நோக்கத்துடன் பத்து லட்சம் டாலர் செலவில் அமெரிக்கா பல விமான நிலையங்களைக் கட்டும் வேலையை மும்முரமாக நடத்தி வருகிறது. பசிபிக் கடற்கரையிலுள்ள விமானம் பூட்டுமிடங்களிலிருந்து புறப்பட்ட 48 மணி நேரத்துக்கெல்லாம் யுத்த விமானங்கள் மாஸ்கோ விமான நிலையங்களுக்குப் போய்ச் சேரும் காலம் நெருங்கிவிட்டது.

இந்த விமானங்கள், அலாஸ்காவிலும் சைபீரியாவிலும் பெய்திருக்கும் பனியின்மீது இறங்க முடியும். மேலும் ரேடியோ மூலம் அவைகளுக்கு வழிகாட்டுவதற்காக இப்போது பல கோபுரங்கள் கட்டப்பட்டு வருவதால் இருட்டிலும், மூடு பனியிலும் உலகத்தின் கடைக் கோடியிலுள்ள சில பாகங்களிலும் யாதொரு ஆபத்தில்லாமல் பறக்கமுடியும். யுத்த விமானங்களும், மிக அவசியமான சரக்குகளைக் கொண்டு செல்லும் விமானங்களும், இந்த புதிய வழியினல் துரிதமாய்ப் போய்ச் சேரக்கூடும்.

கீட்டிள் என்னுமிடத்திலிருந்து நோம் என்னுமிடத்துக்கு, கானடா—அலாஸ்கா வழியாய்ச் சென்றல் 2,200 மைல்; நோமிலிருந்து மாஸ்கோவுக்கு 6,200 மைல்; ஆக மொத்தம் 8,400 மைல். மணிக்குச் சராசரி 200 மைல் வேகத்தில் சென்றல், மொத்தம் 42 மணி நேரத்தில் அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவின் தலை நகரத்துக்கு இனி மேல் போகலாம்.

அமெரிக்க விமானங்கள் ரஷ்யாவின் கீழ்க் கோடிப் படைகளுக்கு இன்னும் துரிதமாய் உதவி செய்து, ரஷ்ய விமானப் பிரிவுகள் மாஸ்கோ போருக்குக் கிடைக்கும்படிச் செய்யக்கூடும். கீட்டிளிருந்து நோமுக்கு 2,200 மைல்; நோமிலிருந்து விளாடிவாஸ்டாக்குக்கு 3,000 மைல்; ஆக மொத்தம் 5,200 மைல்; அதாவது 26 மணி நேரத்தில் பறந்து செல்லக்கூடிய தூரம்.

## ஜெர்மன் மக்களின் நினைப்பு.

ரஷ்ய யுத்தத்தைப்பற்றி ஜெர்மானிய மக்கள் என்ன நினைக்கிருர்கள்? இதைப்பற்றி, சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன. பால்கன் பிரதேசத்தில் நெடுநாளாய் வியாபார சம்பந்தமுடைய ஜெர்மானிய வியாபாரிகள் சிலர் நேராக ஜெர்மனியிலிருந்து துருக்கிக்கு வந்திருக்கிருர்கள். யோசனையுள்ள ஜெர்மானியர்களெல்லாரும் ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கியதைக் கண்டித்துப் பேசுவதாக அவர்கள் கூறுகிருர்கள். ரஷ்யர்களின் எதிர்ப்புச் சக்தியைச் சரியாய்க் கணக்கிடாமல் ஜெர்மன் ராணுவத் தலைவர்கள் பெரிய தவறு செய்துவிட்டதாக அவர்கள் நினைக்கிருர்கள்.

ஜெர்மனியில் ஒவ்வொரு குடும்பமும் ஒருவரையோ பலபேரையோ பலிகொடுத்துவிட்டுப் பரிதபித்துக்கொண்டிருக்கிறது என்று ஒரு வியாபாரி சொன்னர். சொன்னவர் தானே இரண்டு குமாரர்களையும் ஐந்து மருமகன்களையும் ரஷ்யப்போரில் பறிகொடுத்தவர். ஏதோ ஒரு சிலர்தான் டாக்டர் கோப்பல்சின் பிரசாரத்தினல் ஏமாந்து, இந்த யுத்தத்தை போல்ஷிவிக் எதிர்ப்புப் போர் என்று நம்பிக்கொண்டிருக்கிருர்கள். மற்றபடி ஜெர்மன் மக்களெல்லாம், தினமும் வந்துவிட்டது, வந்துவிட்டது என்று கூறப்படும் முடிவான வெற்றியை, ரஷ்ய மக்களின் அற்புதமான எதிர்ப்பு ஒரே யடியாய்த் தொலைத்துவிட்டது என்று ஜெர்மன் மக்களின் மனதில் ஒரு பலமான உணர்ச்சி தோன்றியிருப்பதாகத் தெரிகிறது.

## ஹிட்லருடைய முகாம்.

எல்லாரும் ஆச்சரியப்படத்தக்க விதமாக மூனிக்கில் பேசிய அதைரியப் பேச்சுக்குப் பிறகு, ஹிட்லர் ரஷ்யப்போர் முனையில் உள்ள தமது தலைமை ஸ்தானத்துக்கு திரும்பிச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. ரஷ்ய எதிர்ப்பைக் குலைக்க முடியாமல்போனதுபற்றி ஹிட்லருக்கு பெரிய ஏமாற்றம் உண்டாயிருக்கிறது. அதனல் நாலுமாத காலமாக ஹிட்லர் தமது முகாமில் நடத்திவரும் ராணுவ மயமான வாழ்க்கையில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த ஒரு நிருபர் இதைப்பற்றி சில விவரங்களைக் கூறுகிருர்.

ஹிட்லர் இருக்குமிடம் மிகத் திறமையாக மறைத்து வைக்கப்பட்டுள்ளது. கூடாரங்களும் குடிசைகளும் நிறைந்த அந்த இடம் ஒரு ரஷ்யக் காட்டுக்குள் மறைந்து கிடக்கிறது. அதைச் சுற்றிலும் வெகு

தூரம் வரை இருந்த மக்களையெல்லாம் வெளியேற்றிவிட்டார்கள். ஹிட்லருக்கு தமது பழைய தொண்டர்களின் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்று அடிக்கடி எண்ணம் தோன்றுகிறதாம். சமீபத்தில் ஒருநாள் போர்க்களத்திலுள்ள தலைமை ஸ்தானத்துக்கு, தமக்கு உதவி புரிபவரான ஷைல்டஸ் திரும்பிவரவேண்டுமென்பதாக ஹிட்லர் தந்தி கொடுத்தார். ஆனால் அதற்கு முன் நாள்தான் ஷைல்ட்ஸ் இறந்து போனதாகப் பதில் வந்தது.

### பிரிட்டனின் உதவிக்குப் பாராட்டு.

பிரிட்டனின் எதிர்ப்பையும், இந்த யுத்தத்தில், பிரிட்டன் ரஷ்யாவுக்குச்செய்துவரும் உதவியையும் பற்றிப் பாராட்டி, மிஸ்டர் விக்டோரோப் என்ற ரஷ்ய எழுத்தாளர் மாஸ்கோ ரேடியோவில் பேசியிருக்கிறார். அவர் பேசியதன் சில விவரங்கள் கீழே தரப்படுகின்றன :—

தற்சமயம் ஹிட்லரின் பிரதம தாக்குதலின் பெரும் பாகத்தை நமது நாடு தாங்கிக்கொண்டு வருகிறது. ஆனால் பிரிட்டிஷாரும் தங்களாலானதைச் செய்துதான் வருகிறார்கள். ரஷ்ய அரசாங்கமும், பிரிட்டிஷ் அரசாங்கமும், ஒரு ராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டது ஹிட்லருக்கு முதல்தரமான தோல்வியாகும். இதனால் இரண்டு அரங்கங்களிலோ இன்னும் அதிகமான அரங்கங்களிலோ போர் புரிவதை அவரால் தடுக்க முடியாமற் போய்விட்டது. போல்ஷிவிக் எதிர்ப்பு என்று விளம்பரக்கூச்சல் போட்டதனால் பிரிட்டிஷ் மக்களை அவரால் ஏய்க்க முடியவில்லை. தமது எதிரிகளைப் பிரித்து வைக்கவேண்டுமென்று அவர் செய்த யோசனை பலிக்கவில்லை.

தற்சமயம் மேற்கு முனையில் போர் ஓய்ந்திருக்கிறது. ஆனால், இதனால் பிரிட்டிஷ் மக்கள் போராட்டத்துக்குத் தயார் செய்யாமலிருக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. அவர்கள் சக்திகளையெல்லாம் திரட்டிக்கொண்டிருக்கிறார்கள் ; தங்கள் தற்காப்புகளையெல்லாம் பலப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் மக்கள் தைரியத்தோடு விடாப்பிடியாய்ப் போர் புரிபவர்கள். மிகவும் நெருக்கடியான நிலைமையிலிருந்துங்கூட கௌரவத்துக்குப் பங்கமில்லாமலே தப்பித்துக்கொள்ளுகிறார்கள். டங்கர்க்குக்குப் பிறகு, பிரிட்டிஷ் எதிர்ப்பு தீர்ந்து விடுமென்றெண்ணி “ வெற்றி ” முழக்கம் செய்தார் ஹிட்லர். ஆனால் என்ன ஆயிற்று ? லண்டன், கவென்ட்ரி, பர்மிங்காம், லிவர்பூல் முதலிய நகரங்களின்மீதெல்லாம் ஜெர்மானியர் நடத்திய பிரமாண்டமான விமானத் தாக்குதல்களை பிரிட்டிஷ் மக்கள் சமாளித்தார்கள். சரணடையும் எண்ணமே அவர்கள் மனத்தில் உண்டாகவில்லை. நமது நேச நாடாகிய பிரிட்டனின் சக்தி வாய்ந்த கடற்படை கடலில் காவல் புரிந்து வருகிறது. ஓயாமல் பிரிட்டிஷ் துறைமுகங்களிலும், இப்போது சோவியத் துறைமுகங்களிலுங்கூட, ராணுவச் சரக்குகளைக் கொண்டு வந்து இறக்கிக்கொண்டிருக்கும் கப்பல் கோஷ்டிகளை அது காத்துவருகிறது.

இந்தச் சோதனைகாலத்திலே, ரஷ்ய மக்கள் போர்க்களத்தின் முன்னணியிலே நிற்கிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் மக்களும் அப்படி முன்னணி வகுத்து நிற்கும் நாள் ஒன்று வரும். நமக்கும், பிரிட்டிஷ் மக்களுக்கும், ஜெர்மனியை எதிர்த்துப் போரை நடத்துபவர்கள் அனைவருக்குமே மிகக் கடுமையான சோதனைகாலம் வரப்போகிறது. அப்போது, ரஷ்ய மக்களும் பிரிட்டிஷ் மக்களும் கொண்டுள்ள அசையாத உறுதி இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றே தீரும்.

## 5. பால்கன்ஸ், ஈராக் முதலியன.

இராக், ஜப்பானுடனும், விஷி அரசாங்கத்துடனும் அரசியல் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்ததை நீக்கிவிட்டது. இராக்கில் ரஷீத் அலி கலகம் செய்ததற்கு ஜப்பானும், விஷியும் உதவி செய்தன என்ற காரணத்தினால் இராக் அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்ததென்று அறிவிக்கப்பட்டது.

## 6. கப்பல் நிலைமை.

“ ஆர்க் ராயல் ” என்ற பெரிய பிரிட்டிஷ் விமானந்தாங்கும் கப்பல் மத்தியதரைக் கடலில் முழுகடிக்கப்பட்டது. (இதைப்பற்றிய விவரம் வேறொரு கட்டுரையில் காணலாம்). “ ஓடென் வால்டு ” என்ற ஜெர்மன் கப்பல் அமெரிக்கக் கப்பற்படையால் கைப்பற்றப்பட்டது. நார்வேயின் தெற்குக் கரையில் ஒரு ஜெர்மன் சப்ளை கப்பல், பிரிட்டிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

ஜப்பானை நேரடியாக அமெரிக்காவுடன் யுத்தத்துக்குப்போகும்படி மிஸ்டர். ஷிமாடா என்ற ஜப்பானிய மாஜி மந்திரி ஜப்பானிய சட்டசபையில் கூறினார். மிஸ்டர். குருசு என்ற ஜப்பானியப் பிரதிநிதி அமெரிக்காவுடன் சமரசப்பேச்சு பேசுகையில், இந்த அட்டகாசமான பிரசங்கம் அமெரிக்காவில் ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. அட்மிரல் நோமுரா, ஜப்பானும், அமெரிக்காவும் ஒரு ஒப்பந்தத்தை முடிவு செய்யுமென்று நம்புகிறார்.

### ஜப்பானுடைய கஷ்டங்கள்

ஜப்பான் புதிய யுத்தத்தில் இறங்கினால் அதனுடைய நகரங்களுக்கு ஆபத்து ஏற்படும். அங்கே அநேகமாக எல்லாக் கட்டடங்களும் மரத்தால் கட்டப்பட்டவை. அக்கினிக் குண்டுகள் படும் பட்சத்தில் அவை உடனே தீப்பற்றிக்கொள்ளும். ஜப்பானிய ரயில்வேக்களுக்கும் அதிக ஆபத்து உண்டாகும். ஜப்பானில் ரயில் பாதைகளும், ரஸ்தாக்களும் அமைப்பது என்றால் மிகவும் கஷ்டமான காரியம். ஆகவே யுத்த சமயத்தில் இப்பொழுது உள்ள சில ரயில்வே பாதைகளும், ரஸ்தாக்களும் சேதமடைந்து விட்டால் ஜப்பானில் போக்குவரத்து தடைப்பட்டுவிடும். சீனாவுடன் சண்டை ஆரம்பிப்பதற்கு முன்பு ஜப்பான் நல்ல ரஸ்தாக்கள் சில அமைத்துக்கொண்டிருந்தது. டோக்கியோ, யோகஹாமா, கோப், ஒஸாக்கா, க்யோட்டோ முதலிய இடங்களில் நல்ல ரஸ்தாக்கள் இருக்கின்றன. ஆனால் இப்பொழுதோ ஜப்பானிடம் ரஸ்தா கட்டப் பணம் இல்லை என்று தோன்றுகிறது.

ஜப்பானுக்கென்று பிரத்தியேகமாக சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஜப்பானிய ரயில் பாதைகள் மிகவும் குறுகலானவை. அதனால் வண்டிகள் வேகமாகப் போக முடியாது. இன்னும் நிலச்சரிவுகளும், வெள்ளமும் அடிக்கடி ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கின்றன.

### ரயில் வண்டிகள் குறைவு.

சென்ற நான்கு வருஷங்களாக, போக்குவரத்து வசதிகள் விஷயமாய் ஜப்பான் பிற்போக்கு அடைந்திருக்கிறது. 1938-லிருந்து அதிகமாக ரயில் வண்டிகள் ஒன்றும் கட்டப்படவில்லை. சில வண்டிகள் சீனாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. சாதாரண காலங்களில் ஜனங்கள் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய போதுமான வண்டிகள்கூடக் கிடையாது. அதிகமாகப் பிரயாணம் செய்யவேண்டாமென்று சர்க்கார் ஜனங்களைக் கேட்டுக்கொள்கிறார்கள். சில சமயங்களில் டிக்கட் வாங்கவேண்டுமானால் டிக்கட் கொடுக்கும் நேரத்துக்கு 12-மணி நேரத்துக்கு முன்பே வந்து வரிசையாகக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கிறதாம்.

போதுமான ரயில் வண்டிகள்தான் கிடையாது ; இதல்லாமல் போக்குவரத்துக் காரியங்களுக்காக ரஸ்தாக்களை உபயோகிக்க போதுமான மோட்டார் லாரி வண்டிகளும் கிடையாது. லாரிகள் செய்தாலும் அவைகள் போவதற்கு போதுமான ரஸ்தாக்கள் இல்லை. பெரும்பாலான லாரிகள் ஜப்பானிய பட்டாளத்தின் உபயோகத்துக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இதோடு பெட்ரோல் கட்டுப்பாடும் அதிகமாக இருக்கிறது. ராணுவத்தை சேர்ந்தவர்களுக்குத்தான் பெட்ரோல் அதிகம் கொடுக்கப்படுமேயொழிய, பொது ஜனங்களுக்குக் கிடையாது.

ஜப்பானில் உணவுப்பொருள்கள் விஷயமாகவும் அதிக தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில் அதிகமாகவும் இன்னொரு இடத்தில் குறைவாகவும் உணவுப்பொருள்கள் இருக்கின்றன. இதனால் ஜப்பானில் உணவு வகைகள் குறைந்துவிட்டன என்று சொல்வதற்கில்லை. இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் உணவு வகைகளை எடுத்துச் செல்வதற்குப் போதுமான லாரிகள் கிடைக்காததுதான். ஜப்பானிய அரசாங்கத்தின் விலைவாசித் திட்டமும் இதற்கு ஒரு காரணம்.

ஜப்பானியரின் போக்குவரத்து வசதிகளைச் சீர்குலைக்கவேண்டுமென்று எதிரி யாராவது முயன்றால் ஜப்பானியர்கள் பாடு திண்டாட்டந்தான். ரயில்வே சம்பந்தமாக பழுது பார்ப்பதில் அவர்கள் அதிக கெட்டிக்காரர்களாயிருந்தாலும், அதற்குவேண்டிய சாமான்கள் அவர்களுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகம்.

### ஜப்பானின் ஆச்சரியமான செய்கை.

ஜப்பான் செய்த ஒரு காரியம் அமெரிக்காவுக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. அச்சு

நாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவரும், பர்லினில் ஜப்பானிய ஸ்தானிகராயிருந்தவருமான மிஸ்டர் சபுரோ குருசுவை அமெரிக்க ஜப்பானிய பேச்சு வார்த்தைகளில் அட்மிரல் நாமுராவுக்கு உதவியாக இருக்கும்படி ஜப்பான் அனுப்புவதாகத் தெரிவிக்கிறது. கடைசியாக, ஒரு வகையாகப் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொள்வதற்காகத்தான் ஜப்பான் மிஸ்டர் குருசுவை அனுப்பியிருக்கிறது என்று தோன்றுகிறது. பேச்சு வார்த்தைகளின் போக்கு எப்படியிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாவிட்டாலும், மூன்று விஷயங்கள் தெளிவாகத் தெரிகின்றன. அவையாவன :—

(1) ஜெர்மனி என்ன கேட்டுக்கொண்டும் ஜப்பான் ரஷ்யாவைப் பின்பக்கத்தில் தாக்காமல் இருக்கிறது. ஜெர்மனிக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாதது போல், ஜப்பான் நடந்துகொண்டிருக்கிறது. இது ஜப்பானின் திடமான கொள்கையாயிருக்கும் பட்சத்தில் அமெரிக்காவின் நோக்கத்துக்கும் கொள்கைக்கும் இது ஒத்ததாகும்.

(2) சீனு விஷயமாக அமெரிக்கா, ஜப்பான் கேட்பதை ஒத்துக்கொள்ளாது.

(3) சமீபத்தில் கூறப்பட்ட ஜப்பானிய அபிப்பிராயத்திலிருந்து ஒரு விஷயம் புலப்படுகின்றது. அமெரிக்காவும், ஜப்பானும் ஒத்துப்போகவேண்டுமானல், சீனு ஜப்பானுக்குக் கொடுக்கப்படுவதோடு, கிழக்கு ஆசியாவில் ஜப்பான்தான் அதிகாரி என்பதும் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். அமெரிக்காவின் சுதந்தரக் கொள்கைக்கு விரோதமான இந்த ஜப்பானியத் திட்டத்தை எந்தக்காலத்திலும் அமெரிக்கா ஒப்புக்கொள்ளாதென்று சொல்லலாம்.

### மலேயாவில் யுத்தக்கப்பல்கள்.

ஜப்பானுக்கு இது போன்ற சில அசௌகரியங்கள் இருக்கின்றன. ஆனல் ஜப்பான் யுத்தத்தை ஆரம்பிக்கும் பட்சத்தில், அதற்கெதிராக, மலேயாவிலும், ஆஸ்திரேலியாவிலும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது நடக்கும் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன், மலேயாவின் கப்பல் கட்டும் வேலைக்கு வருஷத்துக்கு 5 லட்சம் டாலர் செலவு செய்யப்பட்டது. இந்த வருஷ முடிவுக்குள் அந்த தொகை 2 கோடி டாலருக்கு உயர்ந்துவிடும் என்று தெரிகிறது. ஆஸ்திரேலிய யுத்தக் கப்பல்களைப் பிரித்துச் செப்பனிடும் வேலையையும் மலேய தொழிற்சாலைகள் ஏராளமாய் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

## 8. விஷி

விஷி அரசாங்கத்தின் ஆப்பிரிக்கா தளகர்த்தர் ஜெனரல் வேகான் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஆனல் வேலையிலிருந்து விலகிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள பிரெஞ்சு ராணுவத்தலைவர்கள் அநேகர் மாற்றப்பட்டார்கள்: இது ஜெர்மனிக்கு அனுகூலமாகச் செய்யப்பட்ட ஏற்பாடு என்று தெரிகிறது. அமெரிக்க அரசாங்கம் விஷியுடன் உள்ள அரசியல் தொடர்பை அறுத்துவிடும் என்று தெரிகிறது.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

செக்கோஸ்லாவாக்கியாவின் தலைநகரமாகிய பிரேக்கைச்சேர்ந்த டெர்நுடாக் என்ற நாவலியர் ஒரு விநோத ஆராய்ச்சி செய்துமுடித்திருக்கிறார். "பசுக்களைப்பார்த்தால் மிகவும் சாதுவான பிராணிகள்போல் தோன்றுகின்றன. அவற்றுக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை என்றுதானே நினைக்கிறீர்கள் ? ஆனல் விஷயம் அப்படியில்லை " என்று அவர் தம் ஆராய்ச்சியை ஆரம்பிக்கிறார். "இதென்ன கூத்து?" என்று பால்காரர்கள் நினைக்கலாம். ஆனல் அந்த நாவலியர் தம் கூற்றுக்குச் சாதகமாகப்புள்ளி விவரங்கள் எல்லாம் தயாரித்து வைத்துக்கொண்டிருக்கிறார். "ஜெர்மன் பசுக்களும், செக் பசுக்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவைதான். ஆனல் செக் பசுக்கள் கொடுக்கும் பால் அளவில் வித்தியாசம் காட்டுகின்றன. செக் பசுக்கள் 202-ம், ஜெர்மன் பசுக்கள் 202-ம் எடுத்துக்கொண்டேன். நவம்பர் மாதத்தில் செக் பசுக்கள் 10,983 லிட்டர் பால்தான் கொடுத்தன. ஆனல் ஜெர்மன் பசுக்களோ என்றுல் 17,430 லிட்டர் பால் கொடுத்தன."

ஜெர்மன் பசுக்களின் தேச பக்தியைப் பார்த்தீர்களா ? சென்ற ஐந்து மாதங்களாக செக் பசுக்கள், தலைக்கு நாளொன்றுக்கு 2½ லிட்டர் பாலே கொடுத்திருக்கும்போது, ஜெர்மன் பசுக்கள் சராசரி நாளொன்றுக்கு 4½ லிட்டர் பால் கொடுத்துக்கொண்டுவருகின்றனவாம். ஆகையால் செக் பசுக்களையும் நாஸிப்பராமரிப்பில் விட்டுவிட்டால், இந்த வித்தியாசம் எல்லாம் மறைந்து விடுகிறது என்று அவர் கூறுகிறர்.

மேலும் அவர் கூறுவது வேடிக்கையாயிருக்கிறது. ஜிஹலாவா என்னும் ஜில்லாவை அவர் எடுத்துக்கொண்டாராம். அங்குள்ள ஜெர்மன் பசுக்கள் பசு ஒன்று தினத்துக்கு 2.74 லிட்டர் வீதம் பால் கொடுக்கின்றனவாம். ஆனல் அதே ஜில்லாவில் உள்ள செக் பசுக்களோ என்றுல், பசு ஒன்று தினத்துக்கு 1·09 லிட்டர் வீதந்தான் பால் கொடுக்கிறதாம்.

ஆனல் தங்கள் பசுக்கள் ஏன் குறைவாகப் பால் கொடுக்கின்றன என்னும் விஷயம் செக் குடியானவர்களுக்கு நன்றாக தெரியும். ஜெர்மானியர்களுக்கு அதிகப்பால் கிடைக்காதபடி அவர்கள் தந்திர வேலை செய்திருக்கிறர்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் அநியாயத்தைப்பற்றி பிரிட்டிஷ் மந்திரி மிஸ்டர் அந்தோனி ஈடன், சமீபத்தில் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது :—"ஹிட்லர் ஒரு பிசாசு, மனிதர்களின் பயத்தையும், பேராசையையும் உபயோகித்துக்கொள்வதில் கெட்டிக்காரர். ஆனல் அவர் மனிதன் உண்மையில் எப்படிப்பட்டவன் என்பதை நன்றாக அறிந்துகொள்ளவில்லை. மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு கோழையாயிருக்கிறனே, அவன் நெருக்கடியான காலத்தில் மிகவும் தீரமாகவும் இருப்பான் என்பதை அவர் தெரிந்துகொள்ளவில்லை. எத்தனைக்கெத்தனை கொள்கைகளை விட்டுக் கொடுக்கத் தயாராயிருப்பானே, அத்தனைக்கத்தனை கொள்கைகளுக்காக சமயம் வந்தபோது உயிரை விடவும் தயாராயிருப்பான். நார்வே, பிரான்ஸ், செக்கோஸ்லோவேகியா, போலந்து, யூகோஸ்லோவியா, கிரீஸ், இன்னும் மற்ற நாடுகளில் நடந்து கொண்டிருக்கும் அக்கிரமங்கள் ஹிட்லரின் பலஹீனத்தைக் குறிக்கின்றதேயல்லாமல் பலத்தைக் குறிக்கவில்லை".

மிஸ்டர் ஈடன் கூறிய விஷயத்தைப் பற்றி, மிஸ்டர் விக்கம் ஸ்டீட் என்ற பிரபல ஆசிரியர் லண்டன் ரேடியோவில் பேசியிருக்கிறர். அவர் கூறியதாவது :—

ஜெர்மானியருக்குக் கலாசாரம் என்றுல் பழைய காலக் காட்டுமிராண்டி வாழ்க்கை என்று தான் அர்த்தம். மிருக பலத்தைக் கொண்டு பிறரை அடக்கியாள்வதுதான் ஜெர்மன் கலாசாரத்தின் நோக்கம். தங்கள் காட்டுமிராண்டித் தனத்தைக் குறித்து அவர்கள் பெருமை அடித்துக் கொள்ளுகிறர்கள். சென்ற மகா யுத்தத்தில் அவர்கள் பெல்ஜியத்தில் நடந்துகொண்ட விதத்துக்கும் இப்பொழுது இந்த யுத்தத்தில் யாராவது ஜெர்மன் சிப்பாய் கொல்லப்பட்டால் அதற்காகப் பிணையாளிகள் பிடிப்பதற்கும் இதுதான் காரணம்.

நான்டீஸிலும், போர்டோவிலும், பிணையாளிகளைச் சுட்டு, குழியில் தள்ளினர்கள். சாவதற்கு முன் அவர்களாலேயே வெட்டப்பட்ட சவக் குழிகளில் அவர்களை வீழ்த்தினர்கள்.

ஹிட்லர் வாக்களித்த வெற்றி பின்னுக்குப் போய்க் கொண்டேயிருக்கிறது. தோற்று விடுவோமோ என்கிற பயம் முன்னுக்கு வந்துகொண்டேயிருக்கிறது. இந்தப் பயத்தினல் தான் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் கிளர்ச்சிகளை கொலைகளினுலும் கொரேத்தினுலும் அவர் தடுக்க முயலுகிறர்.

## 10. நடு நிலைமை நாடுகள்

சென்ற சில வாரங்களாக தாய்லாந்தில் பயம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. "இந்த வருஷமோ அடுத்த வருஷமோ தாய்லாந்தும் யுத்தத்தில் கலக்க வேண்டி வரும்" என்று தாய்லாந்து ரேடியோ தெரிவித்தது. தாய்லாந்தில் மழை நின்றுவிட்டது. இன்னும் சில வாரங்களில் தரை காய்ந்துவிடும். யாராவது படையெடுக்க விரும்பினல் கால நிலை எதிரிக்கு அனுகூலமாயிருக்கும். இதனல் தான் தாய்லாந்து பயப்படுகிறது என்று தெரிகிறது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.